

# கூட்டுறவுகள் மூலம் சுகாதாரம்

கூட்டுறவுகள் மூலம் முழுமையான சுகாதார கட்டமைப்பு, மருத்துவக் கல்வி மற்றும் சேவைகளை ஏற்படுத்த தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவி திட்டம்.

www.ncdc.in

## தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் (என்சிடிசி)

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் (என்சிடிசி) மத்திய அரசின் பாராளுமன்ற சட்டம், 1963ன் படி உருவாக்கப்பட்ட தன்னாட்சி பெற்ற ஒரு சட்டபூர்வ நிறுவனமாகும். இது வேளாண் பொருட்கள் உற்பத்தி, பதனிடுதல், சந்தைப்படுத்துதல், சேமித்தல், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி, உணவுப் பொருட்கள், தொழிற்சாலை பொருட்கள், கால்நடைகள் மற்றும் இதர பொருட்கள் மற்றும் சேவைகள், மருத்துவமனை, சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற திட்டங்களுக்கு உதவவும், கூட்டுறவுகளை அதன் தத்துவத்தின் அடிப்படையில் ஊக்குவிக்கவும் உருவாக்கப்பட்ட நிறுவனமாகும். இது தொடக்க, மாவட்ட, தலைமை மற்றும் ஒன்றுக்கும் மேற்பட்ட மாநிலங்களில் இயங்கும் கூட்டுறவுகளுக்கு நிதி உதவி அளித்துவருகிறது. இந்நிறுவனம் (என்சிடிசி) மத்திய அரசின் வேளாண் மற்றும் விவசாயிகள் நலன் அமைச்சகத்தின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிவருகிறது.

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், கூட்டுறவு நிறுவனங்களுக்கு பல்வகை திட்டங்கள் மற்றும் சேவைகள் அளிக்கும் வலிமையான நிதிமையமாக திகழ்ந்து வருகிறது. இது ஒரு ISO 9001:2015 சான்று பெற்ற நிறுவனமாகும்.

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், தனது 18 மண்டல அலுவலகங்கள் மற்றும் புதுடெல்லியில் உள்ள தலைமையகம் மூலம் எளிமையான, வெளிப்படையான மற்றும் சிறப்பான நடைமுறையுடன் திட்டங்களை பரிசீலிப்பதால் இக்கழகம் கூட்டுறவுகளால் அதிகப்படியாக நாடும் நிதி நிறுவனமாக திகழ்கிறது.

## கூட்டுறவுகள் மூலம் சுகாதாரம்

மத்திய அரசின் வேளாண் மற்றும் விவசாயிகள் நலன் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் வேளாண்மை, கூட்டுறவு மற்றும் விவசாயிகள் நலன் துறையால் வெளியிடப்பட்ட அரசிதழில் மருத்துவமனை, சுகாதாரம் மற்றும் கல்வி தொடர்பான அம்சங்கள் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் சட்ட வரம்பிற்குள் கொண்டுவரப்பட்டு மேற்கண்ட சேவைகளுக்கு நிதிஉதவி வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

> **“தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் (என்சிடிசி) மூலம் நிதி உதவி பெற்ற கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படும் தொடக்க, இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை சுகாதார மையங்கள் வெற்றிகரமாக மக்களுக்கு சேவை அளித்து வருகிறது”**

## நோக்கங்கள்

மாண்புமிகு பாரத பிரதமர், ஆகஸ்ட் 15, 2020ம் அன்று **தேசிய மின்னணு சுகாதார** திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். இது சுகாதார துறையில் புதிய புரட்சியை ஏற்படுத்துவதோடு தொழில் நுட்ப உதவியுடன் சிகிச்சை அளிப்பதில் உள்ள பிரச்சனைகளை குறைக்க முடியும்.

தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகம் அறிமுகபடுத்தியுள்ள 'கூட்டுறவுகளின் மூலம் சுகாதாரம்' என்ற திட்டம் **தேசிய சுகாதார கொள்கை, 2017**ன் நோக்கங்களுக்கு ஏற்ப சுகாதார கட்டமைப்புகளை அனைத்து பரிமாணங்களிலும் வடிவமைக்க உதவும். இது சுகாதாரத்தில் முதலீடு, சுகாதார சேவைகளை உருவாக்குதல், நோய்கள் தடுப்பு, மற்றும் பொது சுகாதாரத்தை அனைத்து துறைகளுடன் இணைந்து மேம்படுத்துதல், தொழில் நுட்பங்களை அணுகுதல், மனித வள மேம்பாடு, பல்வேறு மருத்துவமுறைகளை ஊக்குவித்தல், அறிவுசார் அடித்தளம் அமைத்தல், சிறந்த நிதி பாதுகாப்பு வழிமுறைகளை உருவாக்குதல், அனைவருக்கும் சுகாதாரத்தை எளிதாக வழங்குதல், மருத்துவ காப்பீடு மற்றும் முறைப்படுத்தல் போன்றவற்றை வலிமையாக்குதல், மருத்துவமனைகள், சுகாதாரம், மருத்துவக்கல்வி, செவிலியர் கல்வி, துணை மருத்துவ கல்வி, மற்றும் மருத்துவ காப்பீடு உள்ளடக்கிய ஒரு முழுமையான 'ஆயுஷ்' என்ற நிலைக்காக ஒருங்கிணைந்த நடவடிக்கை தேவைப்படுகிறது. கூட்டுறவுகள் மூலம் இயங்கும் பல மருத்துவ மையங்களுக்கு போதிய கடன் வசதி இல்லாததால் பொதுமருத்துவம், பல் மருத்துவம், ஆயுர்வேதம், ஹோமியோபதி, பிசியோதெரபி, யுனானி போன்ற மருத்துவபிரிவுகளின் இளங்கலை, முதுகலை மற்றும் பட்டயப்படிப்பு போன்ற படிப்புகளை தொடங்க இயலாமல் உள்ளது. மேற்கொண்ட நிலையினை அறிந்து தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் **'கூட்டுறவுகளின் மூலம் சுகாதாரம்'** என்ற இந்த புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.

**<u>இத்திட்டத்தின் நோக்கங்கள்:</u>**

அ) கூட்டுறவுகளால் நடத்தும் சுகாதார மையங்கள் மூலம் எளிதான மற்றும் முழுமையான மருத்துவ சேவைகளை அளித்திட நிதி உதவி அளித்தல்

ஆ) கூட்டுறவுகள் 'ஆயுஷ்' வசதிகளை பயன்படுத்துவதை ஊக்குவித்தல்

இ) தேசிய சுகாதார கொள்கையின் நோக்கங்களை கூட்டுறவு மூலம் நிறைவேற்றிட நிதி உதவி அளித்தல்.

ஈ) தேசிய மின்னணு சுகாதார திட்டத்தில் இணைந்து செயலாற்றிட கூட்டுறவுகளுக்கு உதவி செய்தல்

உ) கல்வி சேவைகள், காப்பீடு மற்றும் அது தொடர்பான சேவைகள் அடங்கிய முழுமையான சுகாதார திட்டத்திற்கு கூட்டுறவுகளுக்கு நிதி உதவி அளித்தல்

**'தேசிய சுகாதார கொள்கையானது சுகாதாரமான இந்தியாவை உருவாக்க நாம் மேற்கொள்ளும் வரலாற்று முக்கித்துவம் வாய்ந்த செயலாகும். இதன் மூலம் ஒவ்வொருவரும் தரமான மருத்துவசேவையை அணுக முடியும்'**

**- திரு. நரேந்திர மோடி, மாண்புமிகு பாரத பிரதமர்**

# கூட்டுறவுகளின் மூலம் சுகாதாரம் திட்டத்தின் நடவடிக்கைகள்

**கூட்டுறவுகளின் மூலம் சுகாதாரம் திட்டத்தின் நடவடிக்கைகள்**

1) **உள்கட்டமைப்பு:** மருத்துவமனை, சுகாதாரம் மற்றும் மருத்துவ கல்வி தொடர்பான கட்டமைப்புகளை உருவாக்குதல், நவீனமையமாக்கல், விரிவாக்கம், பழுதுநீக்குதல் மற்றும் மருத்துவமனைகளை புதுப்பித்தல்

அ) கீழ்கண்ட அனைத்து வகையான உள்கட்டமைப்பு வசதிகளுக்கு.

1. மருத்துவமனைகள் / மருத்துவ / ஆயுஷ் / பல் / நர்சிங் / மருந்தகம் / துணை மருத்துவம் /பிசியோதெரபி கல்லூரிகள் இளங்கலை மற்றும் முதுகலை பட்ட மேற்படிப்பு,
2. யோகா ஆரோக்கிய மையம்,
3. ஆயுர்வேதம், அலோபதி, யுனானி, சித்தா, ஹோமியோபதி மற்றும் பிற பாரம்பரிய மருத்துவ சுகாதார மையங்கள்,
4. முதியோருக்கான சுகாதார சேவைகள்,
5. நோய்த்தடுப்பு பராமரிப்பு சேவைகள்,
6. மாற்றுத்திறனாளிகளுக்கான சுகாதார சேவைகள்,
7. மனநல சுகாதார சேவைகள்,
8. அவசரகால பிரிவு / மருத்துவ சேவைகள்
9. பிசியோதெரபி மையம்,
10. நடமாடும் மருத்துவ சேவைகள்,
11. சுகாதார மன்றம் மற்றும் உடற்பயிற்சி மையம்,
12. ஆயுஷ் மருந்து உற்பத்தி,
13. மருந்துதர தர பரிசோதனை ஆய்வகம்,
14. பல் சிகிச்சை மையம்,
15. கண் சிகிச்சை மையம்,
16. ஆய்வக சேவைகள்,
17. நோய் கண்டறிதல் சேவைகள்,
18. இரத்த வங்கி / மாற்று சேவைகள்,
19. பஞ்சகர்மா /தொக்கனம் / இசார் சூத்திர சிகிச்சை மையம்,
20. யுனானி (இலாஜ்பில்டாட்பீர்) மையத்தின் ரெஜிமெண்டல் சிகிச்சை,
21. தாய்வழி சுகாதாரம் மற்றும் குழந்தை பராமரிப்பு சேவைகள்,
22. இனபெருக்க மற்றும் குழந்தை சுகதார சேவைகள்,
23. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதி பெற தகுதியுள்ள பிற சேவைகள்,

ஆ) தொலைதொடர்பு மருந்து சேவை மற்றும் தானியங்கி மருத்துவ சேவைகள்,

இ) சுகாதார தளவாடங்கள் மற்றும் கல்வி,

ஈ) மின்னணு மருத்துவம் தொடர்பான தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பம்,

உ) காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (ஐஆர்டிஏ) அங்கீகாரம் பெற்ற சுகாதார காப்பீடு.



2) **விளிம்பு தொகை**: மேலே பத்தி எண் 1ல் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளில் அன்றாட செயல்பாடுகளுக்கு தேவையான நடைமுறை மூலதனத்தை உயர்த்த.

3) **நடைமுறை மூலதனம்:** அன்றாட செயல்பாடுகளுக்கு தேவையான நடைமுறை மூலதனம்.

## தகுதி

மருத்துவமனை/பொது சுகாதாரம்/மருத்துவ கல்வி போன்ற சேவைகளை வழங்குவதற்கு தனது துணைவிதிகளில் உரிய திருத்தம் மேற்கொண்டுள்ள மத்திய / மாநில அரசு கூட்டுறவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு நிறுவனங்களுக்கு இத்திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டு இத்திட்டத்தின் கீழ் கடன் உதவி பெற தகுதி பெற்றவை ஆகும்.

தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்தின் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டு தகுதியுள்ள கூட்டுறவுகளுக்கு மாநில அரசு / யூனியன் பிரதேச நிர்வாகம் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ நிதிஉதவி அளிக்கப்படும்.

மத்திய, மாநில அரசு மற்றும் பிற நிதி முகமையின் தொடர்புடைய எந்த வொரு திட்டத்துடனும் இத்திட்டத்தை இணைத்துப் பயன்பெறலாம்.

## திட்ட மதிப்பு

உரிய தேவையின் அடிப்படையில்

## கடன் கால அளவு

திட்டத்தின் தன்மை மற்றும் வருமானம் ஈட்டும் திறனைப் பொறுத்து 1-2 வருட கடன் இடைவெளியுடன் 8 ஆண்டுகள் வரை கால அளவு நிர்ணயிக்கப்படும்.

## வட்டி விகிதம்:

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தால் அவ்வப்போது மாற்றம் செய்து வெளியிடப்படும் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள வட்டி விகிதம் பின்பற்றப்படும். மேலும் இத்திட்டத்தை ஊக்குவிக்கும்பொருட்டு உரிய காலத்தில் கடனை திருப்பி செலுத்தும் கூட்டுறவுச் சங்கத்தின் திட்ட நடவடிக்கையில் திட்ட காலம் முடியும் வரை சங்கத்தில் பெரும்பாலோனார் பெண் உறுப்பினர்களாக இருப்பின் கால கடன் வழங்குவதில் நடைமுறையில் உள்ள வட்டி விகிதத்தில் 1% சதவிகிதம் குறைத்து வழங்கப்படும்.

## பிணையம்

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் கூட்டுறவுகளுக்கு மாநில அரசு மூலமாகவோ அல்லது நேரடியாகவோ நிதி உதவி அளிக்கும். நேரடியாக கடன் வழங்கும் நேர்வில் தொடர்புடைய கூட்டுறவு சங்கம் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் திருப்திக்கு உட்பட்டு கீழ்கண்ட ஏதேனும் ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பிணையத்தினை கழகத்திற்கு அளிக்கவேண்டும்

அ) இத்திட்டத்தால் உருவாக்கப்படுகின்ற சொத்துக்கள் உட்பட அடமானமாக அளிக்கும் சொத்து, கழகம் வழங்கும் கடனில் 1.5 மடங்கு இருத்தல் வேண்டும்.

ஆ) மத்திய அல்லது மாநில அரசால் அளிக்கப்படும் உத்தரவாதம்

இ) அடமானமாக பெறப்படும் தேசியமயமாக்கப்பட்ட/ அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கியின் நிரந்திர இட்டுவைப்பு ரசீதுகளின் பிணையத்தின் மதிப்பு கழகம் வழங்கும் கடனில் 1.2 மடங்கு இருத்தல் வேண்டும்

ஈ) பொதுத்துறை நிறுவனங்கள் / சட்டபூர்வ அமைப்புகள் / மத்திய பொதுத்துறை நிறுவனங்களின் சமூக பொறுப்பு அமைப்புகள் வழங்கும் உத்தரவாதம்

உ) தேசியமயமாக்க்ப்பட்ட / அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகள் அளிக்கும் உத்தரவாதம்

ஊ) அரசு பத்திரங்கள் / பிணையங்கள் கருதுகோளாகவும், பிணையமாகவும் இருப்பின், கழகம் வழங்கும் கடன் தொகையில் 1.2 மடங்கு இருத்தல் வேண்டும்.

## மானியம்

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் இக்கடன் திட்டத்துடன் மத்திய, மாநில அரசு அல்லது எந்தவொரு நிதி முகவையின் மூலம் வரப்பெறும் தகுதியுள்ள் மான்யம் மற்றும் இலவசங்கள் போன்ற எந்தவொரு நிதியுடனும் சேர்த்து பயன்பெறலாம்.

## உள்கட்டமைப்பு உருவாக்கம் (திட்ட வசதிகள்):

| மாநில அரசு மூலம் நிதியளித்தல் | | நேரடி நிதியளித்தல் |
|---|---|---|
| என்சிடிசியிலிருந்து மாநில அரசுக்கு | மாநில அரசிலிருந்து சங்கத்திற்கு | என்சிடிசியிலிருந்து சங்கத்திற்கு |
| கடன் * - 90 % | கடன் * - 50 %<br>பங்கு மூலதனம்**- 40% | கடன் * - 70 % |
| சங்கத்தின் பங்கு -10% | சங்கத்தின் பங்கு -10% | சங்கத்தின் பங்கு -30% |

*மத்திய, மாநில அரசு அல்லது வேறு ஏதேனும் நிதிமுகமை மூலம் மானியம் பெறப்படும் பட்சத்தில் அதே விகித்தாச்சார அளவிற்கு கடன் தொகையில் குறைக்கப்படும்.

**மாநில அரசால் பங்குத்தொகை 40 % அளிக்கப்படாத நேர்வில் அந்த 40% தொகை கடனாக சங்கத்திற்கு அளிக்கப்படும்.

## விளிம்புதொகை

| மாநில அரசு மூலம் நிதியளித்தல் | | நேரடி நிதியளித்தல் |
|---|---|---|
| என்சிடிசியிலிருந்து மாநில அரசுக்கு | மாநில அரசிலிருந்து சங்கத்திற்கு | என்சிடிசியிலிருந்து சங்கத்திற்கு |
| வங்கியில் கடன் பெற * நிதி உதவி -100% *** | கடன் * அல்லது பங்கு மூலதனம் அல்லது கடன் மற்றும் பங்குமூலதனம் - 100 % *** | கடன் * 100 % *** |

*மத்திய, மாநில அரசு அல்லது வேறு ஏதேனும் நிதிமுகமை மூலம் மானியம் பெறப்படும் பட்சத்தில் அதே விகித்தாச்சார அளவிற்கு கடன் தொகையில் குறைக்கப்படும்.

***திட்ட மதிப்பீட்டிற்கு உட்பட்டு விளிம்புத்தொகை பெறுவதற்கான தகுதி நிர்ணயிக்கப்படும்

## நடைமுறை மூலதனம்:

| மாநில அரசு மூலம் நிதியளித்தல் | | நேரடி நிதியளித்தல் |
|---|---|---|
| என்சிடிசியிலிருந்து மாநில அரசுக்கு | மாநில அரசிலிருந்து சங்கத்திற்கு | என்சிடிசியிலிருந்து சங்கத்திற்கு |
| தேவையின் அடிப்படையில் கடன் | கடன் | கடன் |

## உரிய விழிப்பு

ஏந்தவொரு திட்டத்தினையும் அனுமதிக்கும் முன் அதனை மதிப்பீடு செய்ய தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் நிலையான நடைமுறையினை உரிய விழிப்புடன் மேற்கொள்ளும்.

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் திட்டங்களில் நிதி உதவி பெறுவது, நிதி உதவி முறைகள், பொதுவான கோட்பாடு மற்றும் நிலைப்பாடு மற்றும் பொது கடன் விண்ணப்பம் தொடர்பான மேலும் விவரங்களுக்கு www.ncdc.in என்ற இணையத்தை பார்வையிடவும் அல்லது கழகத்தின் மண்டல / தலைமை அலுவலகங்களை இணையதளத்தில் குறிப்பிட்டுள்ள அதன் முகவரி மற்றும் தொடர்பு எண்களில் தொடர்பு கொள்ளலாம்.



# கூட்டுறவு மூலம் சுகாதாரம்


தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம்
வேளாண் மற்றும் விவசாயிகள் நலன் அமைச்சகம்
இந்திய அரசு
4, ஸ்ரீஇன்ஸ்ட்டியூசனல் பகுதி,
ஹவுஸ்ஹாஸ், புதுடெல்லி - 110 016,
இந்தியா